**பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

**தேயிலை ஆராய்ச்சி சபை**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**

# வெற்றிடங்கள்

இரத்தினபுரி, சென் ஜோகிம் தோட்டம், கள அதிகாரி பதவி

இரத்தினபுரி, சென் ஜோகிம் தோட்டம், கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி பதவி

இரத்தினபுரி, சென் ஜோகிம் தோட்டம், ஓட்டுநர் பதவி (லொறி/ டிரக்டர்)

சென் ஜோகிம் தோட்டத்தில் மேலுள்ள பதவிகளுக்கான இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. கள அதிகாரி பதவி

**பணி விபரம்**

பெருந்தோட்ட அத்தியட்சகரின் அறிவுறுத்தல்களின்படி, தொழிலாளர் பிரச்சினைகளை கையாளுதல், அறுவடை நடவடிக்கைகள், விவசாயப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் அனைத்து பிரிவு பதிவேடுகளையும் பராமரித்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

ஆங்கிலம் மற்றும் கணிதம்/ கணக்கியலுடன் க.பொ.த. (சா/த) பரீட்சை (வர்த்தகத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

உதவி அதிகாரியாக குறைந்தது 5 ஆண்டுகள்

**சம்பளம்:** ரூபா 40,190/- - 1,775 x 40 - ரூபா 111,190/- p.m.

**வயது வரம்பு:**

32 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். TRI தோட்டங்களில் சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 2. கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி பதவி

**பணி விபரம்**

தொழிற்சாலை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தேயிலை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வேலையின் செயலாக்கத்தில் தொழிற்சாலை அதிகாரிக்கு உதவுவதற்கு பொறுப்பானவர்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

ஆங்கிலம் மற்றும் கணிதம்/ கணக்கியலுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (வர்த்தகத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

பயிற்சிபெற்ற தொழிற்சாலை மேற்பார்வையாளர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** ரூபா 38,965/- - 875 x 40 - ரூபா 73,965/- p.m.

**வயது வரம்பு:**

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். TRI தோட்டங்களில் சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 3. ஓட்டுநர் பதவி (லொறி/டிரக்டர்)

**பணி விபரம்**

பெருந்தோட்ட அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ் பச்சை இலை/ இதர பொருட்கள் மற்றும் நோயாளர்களை அழைத்துச் செல்லல் மற்றும் தனிப்பட்ட வாகனங்களுக்கு பொறுப்பானவர்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

தரம் 08 சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(கனரக வாகன ஓட்டுநருக்காக) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் அரச அமைப்பு ஒன்று அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனம் ஒன்றில் குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் ஓட்டுநர் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** ரூபா 37,690/- - 875 x 40 - ரூபா 72,690/- p.m.

**வயது வரம்பு:**

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். TRI தோட்டங்களில் சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சேவை தேவைக்கு அமைய இரத்தினபுரி சென் ஜோகிம் தோட்டம் அல்லது இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் வேறு எந்தவொரு தோட்டத்திலும் பணியாற்றுதல் வேண்டும்.

தொடர்புடைய துறையில் விண்ணப்பதாரரின் திறன் மற்றும் அறிவை மதிப்பீடு செய்ய முடியுமான இரு உறவினர் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள், பிறப்புச் சான்றிதழின் பிரதிகள், தொடர்புடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்முறை தகைமைகள், சேவைச் சான்றிதழ்களுடன் சேர்த்து முழுமையான சுயவிபரக் கோவையுடனான விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அதேபோன்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2026 ஒக்டோபர் 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பம் இட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபையில் உள்ள அதிகாரிகளின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். இந்தத் தேவையை உறுதி செய்யாத விண்ணப்பம் நிராகரிப்பதற்கு காரணமாகும்.

**பணிப்பாளர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**

**சென் கூம்ஸ், தலவாக்கலை**